வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4534 /ஆ4/2024 நாள்: 06.12.2024

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –தமிழ்நாடு ஊரகப்பகுதி திறனாய்வுத் தேர்வு(TRUST EXAMINATION ) –டிசம்பர் 2024 –14.12.2024 –தேர்வுமைய பெயர்பட்டியல் மற்றும் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகள் பதிவிறக்கம் செய்தல் –சார்பு |
| பார்வை | : | அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.016971/ டி(4)/2024 நாள் 05.12.2024 |

===============

தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத்தேர்வு(TRUST) 14.12.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களை www.dge .tn.gov.in என்ற இணையதளத்தில் 09.12.2024 பிற்பகல் முதல் தங்கள் பள்ளிக்கான User ID / Password –ஐ கொண்டு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத்தேர்வு(TRUST) விண்ணபித்துள்ள மானவர்களுக்கு தேர்வு கூட நுழைவுச் சீட்டுகளை சமந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து தலைமை ஆசிரியர் கையொப்பம் மற்றும் பள்ளி முத்திரையிட்டு வழங்கவும், தேர்வு மைய விவரத்தினை அம்மாணவர்களுக்கு தெளிவாக தெரிவிக்கவும் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தேர்வர்களின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளில் பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் எதும் இருப்பின் பிழையினை சிவப்பு நிற மையினால் சுழித்து சரியான திருதத்தினைக் குறிபிட்டு தலைமையாசிரியர் சான்றொப்பம் மற்றும் பள்ளி முத்தரையுடன் தேர்வர்களை தேர்வுகூடத்திற்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மீள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:
தேர்வு மைய பள்ளித்தலைமை ஆசிரியர்கள்,வே.மா.
சார்ந்த உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வே.மா.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை)அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது